OFFICE OF [illegible] REGISTRAR OF BOOKS
14 DEC. 91
MADRAS.

திருச்சிற்றம்பலம்.

# பொய்கைப்பள்ளு.

இஃது

ஆற்றங்கரை ஸமஸ்தானம்

ஆதீனகர்த்தர்

மஹா ராஜ ராஜ ஸ்ரீ

சொக்கலிங்கப்பெத்தண்ணல்பூபதியவர்கள்

பேரில்

ஷை ஸமஸ்தான வித்துவான்

கடிகை

அங்குமுத்துப்புலவரவர்களால்

இயற்றப்பட்டு,

K. S. சங்கரநாராயண பிள்ளையால்

தமது

சிந்தாமணியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பாளையங்கோட்டை.

1891.

உ

திருச்சிற்றம்பலம்.

# பொய்கைப்பள்ளு.

காப்பு.

சொற்புகழ் பெருகும்பொய்கைச் சொக்கலிங் கப்பெத்தண்ணல்
கற்பக தாருமேற்சொல் காதல்கூர் பள்ளிசைக்குச்
செற்பொருங் குழலாள்சத்தி சிவன்கண பதியின் வந்தோன்
வெற்பெடுத் தான்புரந்தான் விண்ணவர்பலர்காப் பாமே.

## சிறப்புப்பாயிரம்.

இஃது
ஆற்றங்கரை ஸமஸ்தான வித்துவான்
கடிகை அங்குமுத்துப்புலவரவர்கள் குமாரர்
சுப்பிரமணியப் புலவரவர்கள் சொல்லியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மதி கருங்கொண் மூவளைநந் தினமியானை
வாரகமருப் புமெம்புதண்டா மரை பசப்பல்
கதலிகாரஞ் சாலிமீன் கரும்புபெண் கள்கழுத்து
மூங்கில் பாம்பு கமுகு கொக்கின்
முதிருமுத்தி லிப்பிமுத்த மேன்மையுத்த முத்தின்
மிக்கன் கடிகையங்கு முத்தம் முத்திற்
றுதிசெய் சொக்க லிங்கப்பெத்த ணேந்திரன்பட்
சோதிமுத்தர் தோன்றினதைத் அறிவார் யாரே.'

11549

இஃது
ஆற்றங்கரை ஸமஸ்தானம் சர்வாதிகாரி
பொ-சிவஞானம்பிள்ளையவர்களியற்றியது.

நிலைமண்டிலஆசிரியப்பா.

மங்கலம் பெருமைசால் மதுரையம் பதியிற்
சங்கப் புலமையோர் தவறற விளக்கும்
ஒன்பது பத்தா றாயிர பந்தம்
என்பன வாமவை யாவையு முரைப்பேன்
சாதகம் பிள்ளைத் தமிழ்க்கவி பாணி
ஆதி கலம்பகம் அகப்பொருட் கோவை
மருவுமைந் திணைச்செயுள் வருக்கக் கோவை
அருமைமும் மணிக்கோ வையங்க் மாலை
அட்ட மங்கலம் அநுராக மாலை
சட்டைம ணியாலை இணைமணி மாலை
நவமணி மாலை நான்மணி மாலை
உவமையில் கவிரு ருணாநாம மாலை
பலசந்த மாலை பன்மணி மாலை
பொலிதரு மணிமா லைபுகழ்ச் சிமாலை
அணிபெரு மகிழ்ச்சிமா லைவருக் கமாலை
மணமலி மெய்க்கீர்த் திமாலைகாப் புமாலை
வளர்வேனில் மாலை வசந்த மாலை
தளையிச காதுளை தாரகை மாலை
உற்பவ மாலை யுயர்தானை மாலை
மூற்புல வோர்புகல் மும்மணி மாலை
தரைபிசை விளங்குந் தண்டக மாலை
விரிநிலா கவரும் வீரவெட் சிமாலை
கருதிய வெற்றிக் கரந்தை மஞ்சரி
பொருவதற் குரிய போர்க்கெழு வஞ்சி
வாலாற்று வஞ்சி மன்னர்க் குரிய
செருக்கள வஞ்சி திறற்காஞ்சி மாலை



உலாநொச்சி மாலை உழிஞை மாலை
வருதும்பை மாலை வாகை மாலை
வாதோ ரணமஞ் சரியெண் செய்யுள்
சூதிலா துரைக்குந் தொகைநிலைச் செய்யுள்
ஓவியலர் தாகி புலமினிற் சிறந்தோர்
பலர்களும் விளக்கும் பதிற்றந் தாதி
நூற்றந் தாதி நுவலத் தகுமுலா
போற்றும் உலாமடல் பொருந்தும் வளமடல்
ஒருபா வொருபஃது இருபா விருபஃது
பரவிய ஆற்றுப் படைகண் படைநிலை
நிகழ்த்திய துயிலெடை நிலைபெய ரின்னிசை
பகுக்குமவ் வின்னிசை பகர்பெயர் நேரிசை
இயலுறும் ஊர்நே ரிசையூர் வெண்பா
நியமமாம் விளக்கு நிலைபு றநிலை
கடைநிலை பொருள்சிறை காண்கை யறநிலை
படையுறு தசாங்கபத் துத்தசாங் கத்தயல்
அரசன் விருத்த மணிநய னப்பத்து
பருமலை யோன்ற பயோதரப் பத்து
பாதாதி கேசம் கேசாதி பாதம்
ஆதியிற் கூறும் அலங்கார பஞ்சகம்
வருந்திய கைக்கிளை மங்கல வள்ளை
பொருந்திய தூது புகழு நாற்பது
குழமகன் தாண்டகம் கூறிய பதிகம்
பழுதிலாச் சதகம் பண்செவி யறிவுறூஉ
வாயுறை வாழ்த்து புறநிலை வாழ்த்து
ஏயும் பெருமை யிசைபவ னிக்காதல்
உணர்குறத் திப்பாட்டு *உழத்திப் பாட்டு
இணையிலா ஊசல் எழுகூற் றிருக்கை

*உழத்திப்பாட்டு—பட்பிரபந்தம்.

## சிறப்புப்பாயிரம்.

விளவிய கடிகைவெண் பாச்சின் வய் ஞ்
கனமிரு விருத்தலக் கணமுது காஞ் ஞி
இயன்மொழி வாழ்த்து இசைபெரு மங்கல ம்
பயில்பெருங் காப்பியம் பகர்சிறு காப்பிய ம்
எனவுரை செப்புரு விசையுற விளங்கு ம்
கனமுறு முழுத்திப் பாட்டெனக் கழறு ம்
பட்பிர பந்தப் பாட லதுப்பா ம்
பெட்புறு மவற்றினைப் பேசக் கேண் மோ
காப்பெனச் சொல்லுங் கடவுள் வணக்க ம்
மூப்புடைப் பள்ளி மூத்தாள் வர வு
பான்மொழி யிளைய பள்ளிவர வு
கோலுளை மாறுக் குடும்பன் வர வு
தன்றுதி கூறல் மூத்தாள் வரலா று
அன்புறு மிளையா ளவள்வர லா று
மன்னல் நனது வரலா றவைரவ ர்
எள்ளரி தாக எடுத்தெடுத் தியம்ப ல்
காட்டு வளங்குயில் கவில்கக் கேட்ட ல்
வாட்டமில் கடவுளை மழைக்குப் பரவ ல்
மழைக்குறி யோர்தல் வாகதி வர வு
செழிக்குமக் கதியின் சிறப்புக் காண்ட ல்
பண்ணையான் வரவிரு பள்ளியர் முறையிட ல்
பெண்ணிவ ளானைப் பெரிதவ ணரப்ப ல்
பள்ளன் வரவுபண் ணைச்செயல் வினவுத ல்
கள்ளருஞ் செயலுரைத் திடையவை யமைத்த ல்
ஆயர் வருத லவர்புகழ் கூற ல்
தாயமுத் தவன்கோட் சொல்லி முறையிட ல்
எழுத்தபன் னன்றிடை யிருத்தால் போல்வய ல்
அழுத்தவே பணகா லணிவிலம் இடுத ல்
அவன்புலம் புதலினை பாளெதி ராங்க ல்
உவந்தமுத் தவளாங் குறைவு கொடுரா ல்

## சிறப்புப்பாயிரம். இ

இனைபல வைப்பழித் தியம்பிழுத் தவ னை
உளமகிழ்ச் சேத்தி யுயர்சிறை மீட்டெ ல்
அவளைத மறுத்த லவளவட் குழுற ல்
தவறுறு சிறைவிடத் தவ்வளைப் பரவ ல்
விதைமுத விபவ விவரக் கூற ல்
பதவ அழுதலைப் பாற்காவின வெருள ல்
பள்ளினைப் பாங்குதல் பள்ளியர் புலம்புத ல்
உள்ள மகிழ்வா யுடனெழுக் திருத்த ல்
பண்ணையார்க் கதனைப் பணிவுடன் சொல்ல ல்
வண்ணநல் லுற்று வயலெழு கதெ ல்
விதைத்தலைச் செப்பம் விதமுறச் செய்த ல்
களைத்தனி னெல்வகைக் கணக்குட னைத்த ல்
வாய்த்திடு மூத்தாள் மனக்குறை கூற ல்
பார்த்தெதி ரிளைக்கு பள்ளிய பேச ல்
இவற்றிற் கிடையிடை யேயகப் பொருட்டு றை
கவித்திறத் தமைத்த கற்பனை யுஞ்சொல ல்
பன்னுமிவ் வாற்றுற் பாட்டுடைத் தலைமக ன்
மன்னிய சேர்த்தி வளத்தினை யுரைக்கு ம்
பலவகைப் பள்ளிசைப் பதுவ லெலாமுடி க்
குலமென லாம்படி கூறுமிப் பொய்கை ப்
பள்ளெனச் சொல்லும் பனிமதி வாண ழ
தன்னரு வாக்கின் றழுவிய வாக்க றி
பாற்கட லுதித்தன பான்மைய தாமோ ரு
காற்கவி யுக்தெரி கற்றமி முகத்திய ன்
சிக்காரம் காக்கத் திசிரிலைப் பேவு ம்
ஐந்தரு சொக்கலிங் கப்பெத்த ளைக்திர ன்
மனமகிழ கடிகை மாக்களிற் சிறந்தோ ன்
இனிதுனை ரக்குமுத் தியற்கவி வாண ன்

## சிறப்புப்பாயிரம்.

சீர்மைதகூர் கல்விச் செழுந்தமிழ்க் கடலு
வந்தது கண்டு மகிழ்வுறா ரியாரே.

---

ஷை ஸமஸ்தானம் சங்கீத சாஹித்திய வித்துவான்
கிருஷ்ணய்யங்காரவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வாரிலங் கணஞ்சேர்பொய் கைப்பதியி லுயர்கடிகை
மாயில வந்தோன்
பாரிலக் கணமபரம்போற் பல்நூலா யங்கு முத்துப்
பாவலன்மீப்
பேரிலக் கணந்தொகுமைந் தருகீர்பல் பொருள்வழங்கும்
பெருமை வாய்ப்பத்
தேரிலக் கணஞ்சொல்வழி பட்புகன்றான் செவிவாய்க்குத்
தேனி தாமே.

---

ஷை சமஸ்தானம் பாப்பைநகர் வசிதம்
கர்ணன் கிருஷ்ணபிள்ளை சொல்லியது.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மலி சிறைப்புள் ளினமனைத்தும் வணங்காறு
மணிமௌலி புனைக்தரச செய்ய லுற்ற
குலவைன தேயன்முகுந் தனைமேற் கொண்டு
குவலயமெ லாமுலவுந் தன்மை போலப்
பலகலையு முணர்கடிகை யங்கு முத்து
பகர்தமிழ்ப்பள் ளாகபல பள்ளும் போற்றச்
சீலமதனன் சொக்கலிங்கப் பெத்தணேந்திரன்
சீர்த்தியைமேற் கொண்டுலவச் செய்வதாமே.

---

உ

சிவமயம்.

# பொய்கைப்பள்ளு.

திருச்சிற்றம்பலம்.

காப்பு.

கடவுள் வணக்கம்.

(கலிப்பா.)

பார்பூத்த பூம்புனல்சூழ் பண்ணைவிளை வோங்கவளர்
பேர்பூத்த சொக்கலிங்கப் பெத்தண்ணல் பள்ளிசைக்கே
சீர்பூத்த பொய்கையுறை சித்திரவெண் ணீற்றுநுதற்
கார்பூத்த கைக்கனிற்றுக் கற்பகப்பொற் றுணையே. (க)

---

தோடையம்.

சிந்து.

(இ-ம். நாட்டை. தாளம்-சம்பை.)

பார்வளர் கொற்ற நன்குடைக் கதிபதி
பாவல மிக்க செஞ்சொலுற் பவிகவி
பாரதி யொத் தியம்புவிற் பனைகன
பாவலர் புகழ்வோன். ... ... செய—செய.

வார்வளர் புட்ப மங்கைநட் பிசைதிசை
வாரிதி சுற்று மண்டலத் தனையனா
மாமண கற்பி லங்ககற் பணியணி
மார்பின னியவான். ... ... செய—செய.

கார்வளர் வுற்ற செங்கைபொற் புயசெய
கார்முக கட்க கங்கபத் திரகர
கார்முகில் சொக்க லிங்கபெத் தனைகுண
காரிபோய் னைகயினன். ... ... செய—செய.

சீர்வளர் சொற்பிர பந்தபட் சொலகல
தேவரு நித்த முத்தொழுச் சிவதல *
செய்திணை மைக்க ருங்கடற் றுறையிறை
சேவடி துணையே. ... ... செய—செய. (௨)

மருவு மாதர்தம் மலையொத்த முலையொத்த
வளரு நீள்புய னயிலுக்கு மயிலுக்கும்
வசிய வேளருள் வரதத்தன் விரதத்தன்
வண்டமிழ்க் குரியான். ... ... செய—செய.

விருப கோளரி தலைமைக்கு நிலைமைக்கும்
நிடதர் கோனிகர் புகழ்பெற்ற மகிழ்வுற்ற
நிறைம ஞெகான் மனுவுத்தி தனுவுத்தி
நெஞ்சகத் தணர்வோன். ... ... செய—செய.

இரத வாளையன் றருமத்தில் வருமத்தில்
எவரு நேரிலன் கனிகைக்குஞ் சிவிகைக்கும்
இசையு மீனவ னசொக்க வருசொக்க
லிங்கபெத் தனைமால். ... ... செய—செய.

அரசன் மீதபன் வளமுற்ற வுளமுற்ற
அவனி யாயிதழ் பவளத்தி தவளத்தி
அருளு ளாளபன் மனைவிப்பெண் மணிவுட்கொள்
ளன்பர்கற் றுணையே. ... ... செய—செய. (௩)

இக்க டர்க்குமுத் ததிர்வள நாட்டினன்
எக்க ணுந்தொழுத் தகுபுகழ் நாட்டினன்



இட்ட மங்கலத் தொனிமிகு நாட்டினன்
எறநில்ல வார்கோன். ... ... செய—செய.

மிக்க சுந்தரத் தினனிதி யாற்றினன்
வெட்கு றுங்கலித் துயர்களை யாற்றினன்
மெய்த்தவஞ் செய்யுத் தமரடை யாற்றினன்
விரைமுல்லை மார்போன். ... ... செய—செய.

சொக்க லிங்கபெத் தனைசுப வாக்கினன்
துட்டர் வந்தடித் துணைதொழ வாக்கினன்
சொற்சி றந்தமுத் தமிழ்முதிர் வாக்கினன்
சுரர்மன்னன் மாலோன். ... ... செய—செய.

பற்கு னன்றனக் குரியபட் பாட்டினைப்
பட்கி யைந்தமத் தளதொனிப் பாட்டினைப்
பற்ற வங்கெடப் * பகுகமப் பாட்டினைப்
பதியையுண் ணினைவாம். ... ... செய—செய. (௪)

ஒலிதரு கல்விக் கதிபதி யாமென
உரைசெயும் வில்லர்ச் சுனன்மதி போன்முகன்
உளமகிழ் சின்னத் துரைசிவ சாமிபின்
னுளதுரை மார்கள். ... ... செய—செய.

மலர்மின் னுறுறை மார்பினர் தாமரை
மலரை நேரிரு தாளிணை நாடொறும்
வரைவி லாமன நேமக ராகிய
மாப்பிள்ளை மார்கள். ... ... செய—செய.

நலமுறு திரு மாலுமின் புறுகுண
நயவச னவி பேகாஞ் சிதனெனும்
நதிகுல கனயோ கமர்திரி சிவ
ஞான தயாளும். ... ... செய—செய.

---

* ப-வாயு, கு-பூமி, கம்-ஆகாயம், அப்பு-நீர், ஆட்டின் ஐ-அக்கினி.

பலர்துதி சொக்க லிங்கபெத் தணசெய
பாதனை யொப்ப வந்தபொற் றருமிசை
பகர் தமிழ்ப்பிர பந்தபட் சொலவுயர்
பாவலர் துணையே. ... ... செய—செய. (௫)

---

## மூத்தபள்ளி, இளையபள்ளி வரவு.

(கலிப்பா.)

துதிவளர்தென் பொய்கையர்கோன்
சொக்கலிங்கப் பெத்தண்ணல்
கதிர்வளர்சா லிப்புனல்வாய்க்
கால்வயற்பண் ணைக்கிசைந்த
மதிமுகவேற் கண்மடவார்
மள்ளியர்சொற் கேட்டுவில்வேள்
அதிகமயல் கொண்டவர்மே
லம்புதொடற் கெய்தினனே. (௬)

சிலேடை.

சிந்து.

(இ-ம். மத்திமாபதி. தாளம்-சாய்ப்பு.)

எதிர்ந்தசும்பை முகிழ்போற் சரிதனமும்—பகுத்
தியம்பு மூரியபே ரிளம்பரு வமும்
துதைந்த திரைக்கொழுந் துப்புருவமு—முன்னரை
துலங்கும் கருங்குழலுஞ் சோர்வில் வாய்மையும்
முதிர்ந்த கன்னன்மொழியு நிரைநிரையாயிவ்—வாற்றல்
மூத்தாளிளை யாளென மொழியும் வண்ணம்
பொதிந்த புகழ்சேர் சொக்கலிங்க பெத்தண்ணல்—பண்ணைப்
புனல்வயன் மள்ளர்குலப் பூவையர்வந் தார். (௭



வள்ளலெனைய சொக்கலிங்க பெத்தண்ணல்—பண்ணை
மள்ளியர் தன்மையின்னம் வகுத்துச்சொல் வேன்
பள்ளடி யாற்கினியாள் பகலிரவுந் தனியாள்
பார்வைக் குளங்கனியாள் பலவிதத் தும்
உள்ளவஞ் சம்மதியா ளூறக்கத்திலும் பதியா
ளொன்று மனத்துதியா ளூறவு செப்புங்
கள்ள மொழிக்குதவாள் கலவியினுங் கோப்பில்லாள்
கணவன்மேற் சாடிச்சொல்லாள் கனதனத் தாள். (௮)

---

## மூத்தபள்ளிவரவு.

(கலிப்பா.)

கருணை கரக்குரிசில் கற்பகம்போல் வந்தபொய்கைப்
பெருமான்மால் சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணையுள்ளத்
திருமா தரின்மூத்தாள் செவ்விக்குக் கொங்கைரண்டு
மிருதா மரைமுகிழ்போன் றிருக்காலொப் பில்லிவட்கே. (௯)

சிந்து.

(இ-ம். தசாபதி. தாளம்-ஆதி.)

பச்சைக் கல்லிட்ட மதிக்கரிய வுயர்ந்ததங்கப்
பாசிக் கொத்துமுன் கிடந்தசைய மணப்
பச்சைக்கல் லிட்டமதி முகத்துக்குத் தாலியும்
பைம்பொன் மஞ்சட்கு லிப்பு மிசையக்
கச்சுக்கு ளடங்கவொண் ணாதமுலை யிரண்டுங்
கைவளையுங் குலுங்கக் கிலுங்க வொரு
மூச்சகம்பணி சொக்க லிங்கபெத் தண்ணல்பண்ணை
மூத்தபள்ளி நடந்து வந்தாள். (௰)

---

## இளையபள்ளிவரவு.

(கலிப்பா.)

நலஞருந் தென்பொய்கை நன்னகரான் சோமனெனச்
சொலுமேர்மை நீதிபரன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
மலிநீர் வயற்பண்ணை வைப்பாற் றிளையபள்ளி
மூலைவாயி லுள்ளிருப்ப முருக்குமேற் பூத்தனவே. (கக)

### சிந்து.

(இ-ம். பெலஹரி. தாளம்-அடசாப்பு.)

இலங்கு மலர்வதன மியல்நடை பாவதனம்
எழிலுளாக்க வதனை மெனவு மின்னக்
கலந்தவெண் முத்துச்சரங் களபமுலை குஞ்சரக்
கண்களிரண் டுஞ்சரங் கைவளை தன்னைப்
பொலிந்த துடிமெல்லிடை போர்மதனுங் கண்டிடை
பொன்னுருங் கொங்கையிடை புனருமன்ன
மலிந்தபுகழ் சேர்சொக்க லிங்கபெத் தண்ணல்பண்ணை
வைப்பாற் றிளையாள்வந் தாள் மலர் மானென்ன. (கஉ)

---

## குடும்பன்வரவு.

(கலிப்பா.)

சுந்தரஞ்சேர் தென்பொய்கைச் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
மந்திரிசிவ ஞானகொடை வள்ளல்மே வின்புறல்போற்
பந்துமுலை வைப்பாற்றுப் பள்ளி யதிவிரகச்
சிந்துவினீங் காமலநு தினம்பள்ளி கொண்டனனே. (கங)

### சிந்து.

(இ-ம். கலியாணி. தாளம்-ஆதி.)

மெட்டுந் திசையிரண்டு மெட்டுஞ்சென் றாடக்கு
மெட்டும் வளைதடிக்கு மெட்டு மேனுமேல்



தட்டு மெனவெறிந்த தட்டுஞ் சிரிப்புமெல்லு
தட்டு நெருக்குவாய்க்கு தட்டு மாண்மையும்
கட்டும் பாகைக்கண்டா கட்டுமென் பதுங்கொண்டைக்
கட்டு மதுக்குடிப்ப கட்டுந் தோணவே
வட்ட மதிக்குடையான் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
வள்ளல்பண் ணைக்குடும்பன் வந்தோன் றிறன். (கச)

---

## குடும்பன்றன்பெருமைகூறல்.

(கலிப்பா.)

துன்னு புகழ்பெருகு சொக்கலிங்கப் பெத்தண்ணல்
மன்னர் பிரான்பண்ணை வளரவளர்க் குங்குடும்பன்
பொன்மதில்சூழ் பொய்கையிலைப் போற்று வெவனெனிலும்
அன்னவனெல் லோரையுமோ ரணுவாய் மதிப்பானே. (கரு)

### சிந்து.

(இ-ம் சங்கராபரணம். தாளம்-ஆதி.)

திருமால்சொக் கலிங்கப்பெத் தண்ணல் பதமலர்தஞ்
சிரம்புனை யாதவர்கை நரம்பெடுப் பேன்
புரிவிடுப் பேன்கயி றுய்த்திரிப்பேன் பலவுமொன்றாய்ப்
பூட்டிப் பிணையற்கண்ணி கட்டித் தொடுப்பேன்
தரைமீ திகழ்வார்வாய்த்தோ லுருபுறமு மெடுத்துத்
தையல்வா ரிடுவோர்தங் கையிற்கொடுப் பேன்
துலாசமுகங் காணுதார் கரவேல்களைக் கோலாக்கித்
தொடுத்தவப விற்களை யெடுப்பேனுண் டே. (கசு)

மாற்றா ரனைவரையுந் தோற்றோடி னோவிட்டு
மற்றோர் மூலைபிடிக்க வாங்குமிந்தக் கை
சேற்றினுள் ளேசெலுத்தி யேற்றருளை மேலிட்டுச்
செழுநீர் வயல்மிதிக்கச் செய்யுமிந்தக் கால்

ஆற்றூர் தமைப்பிடித்து நாற்றிசையு முழுமா
டாக்கியவ் வுழவில டிக்குமித்தக, கோல்
கோற்றொடி யார்மதனன் சொக்கலிங்க பெத்தண்ணல்
கொண்டல்பண் ணைக்கேற்ற குடும்பனு னே. (௧௭)

---

## மூத்தபள்ளி தன்வரலாறுகூறல்.

(கலிப்பா.)

பிரபலவான் சொக்கலிங்கப் பெத்தண்ணற் பூமனெனுஞ்
சுரசகுண வசன நாருபண்ணைப் பள்ளனுக்கு
விரகமிக்காய் மூத்தபள்ளி விண்ணமுத மீய்ந்தாலு
மிரவு பகலினையா ளிதம்போ லினியாதே. (௧௮)

### சிந்து.

(இ-ம். காம்போதி. தாளம்-ஆதி.)

சில்லவார் குலபதி சொக்கலிங்கப் பெத்தண்ணல்
சிறக்கும்பண் ணைக்குடும்பு செய்யடிமை யான்
மெல்லவென் னிடம்வந்தான் வேண்டிமனது வந்தான்
மேவலாம் பருவந்தான் வீட்டிற்கே னென்றேன்
இல்லின் மணக்காப்பிட்டா னிளையாள் மயற்காப்பிட்டா
னெல்விரலிற் காப்பிட்டா னிருப்பே யங்கே
ஒல்லையில் வரமாட்டா னுனக்கேதே னுங்கமாட்டா
னுள்ளபணி செய்மூத்த பள்ளிநா னே. (௧௯)

---

## இளையபள்ளிவரலாறுகூறல்.

(கலிப்பா.)

சார்காட்டுப் பைந்தருநேர் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
சாமேற்றுங் காண்டீப தனஞ்சயன்பண் ணைக்குடும்பன்
இரவேற்கு மெல்லிரண்டு மிளையாள்செய் புண்ணதன
முரமேற்றத் தக்கதில வொருவனந்தி வேறிலையே. (௨0)



### சிந்து.

(இ-ம்-ஆனந்தபைரவி, தாளம்-ஆதி.)

துங்கன் சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணைக்குடும்பன்
றுதிசெய்யவைப் பார்த்தைவிட்டுப் பதிவிலுற் றேன்
இங்குகண்டான் கூப்பிட்டா னென்மேலிட்டுக் கூப்பிட்டா
னெதிர்ந்தேன் கரங்கூப்பிட்டா னின்பந்தேனு னும்
தங்குவதிங் கென்சொல்லைத் தள்ளாவ குவிச்சொல்லை
தருவா னெனக்கேசொல்லைத் தனியே மூத்தாள்
அங்கேயிருப் பான்தேடா னவளவ னுக்குத்தேடா
னவனுக்கேற் றபெண்டிலை யானுநானே. (௨௧)

---

## குடும்பன்றன் வரலாறுகூறல்.

(கலிப்பா.)

மிக்க புகழ்பெருகு மேற்குல வார்குலத்தான்
சொக்கலிங்கப் பெத்தண்ணல் சோமன்பண் ணைப்பெருந்த
மக்காலத் தேதொடங்கி யடிமைக் குடும்புசெயப்
புக்கான் வான்முறையாய்ப் புகலுவா னுநானே. (௨௨)

### சிந்து.

(இ-ம். மோகனம், தாளம்-ஆதி.)

சித்தசன் சொக்கலிங்கப் பெத்தண ராசன்முன்னோர்
சீரார்சக் கிரகிரிபோற் பாரில்வளர், சேர்
உத்தமர் வாழும்பொய்கை முத்தமிழ் சேரும்வைப்பா
றொருநாற் றிசைபுகழும் பெருநாழி யும்

ஒத்தமனு முறைசெலுத்தி மேற்குல வானென்
னுரை செய்ய வழிமுறை யாகபுரி
அத்தினர் தொட்டுநேராய்ச் சித்தமகிழ் பண்ணைக்கொத்
தடிமைக் குடும்புசெய்பள் ளடியானுனே. (உங)

பள்ளெனன் பதுமேழென்பார் தீண்டாமை யென்பர்தோஷம்
பழனநெல் லெல்லைபா ளிர்பாய்ச்சி விளைவு
கொள்ளுமி னூர்பலருந் தீண்டவிதற் கிலையோ
கோயிற்கி தில்லையென் றூற்கோயி லென்றுண்டோ
வள்ளல்சேர் கலிங்கப்பெத் தண்ணல்குள மனைத்தும்
வயலுழ காற்றுநட மள்ளியாரு வும்
என்னாரு மெத்தனுவு மேற்றம்பண் ணைக்காதலா
விழிபுரைசெய் வதுவுமெவர் காணுண்டே. (உச)

குடும்பனென்ப வயர்த்தசாதி யானல்ல வென்பர்
குடும்ப வயர்ச்சியினைக் கூறவெளி தோ
நெடுங்கடற் புவியுள் ளோரவரவர் குலத்துக்கு
நிகழ்த்துந் தலைமையுள் ளோனே குடும்பனும்
இடஞ்சேர் மறையோராதி குலமோரோட் டருக்கெல்லாஞ்
சேர்ந்திருக்கு மென்பெயர் தெரியு மீது
தடம்புயன் சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணைமள்ளச்
சாதிக் குடும்பனெனைத் தள்ளலரிதே. (உரு)

பார்புகழ் மதுரைசெக் தூரினில் வசியர்கள்
பார்ப்பார்கள் வாழ்தெருப் பள்ளத்தெரு வென்றே
ஆருமறிந் தவலாயிக மூர்பயி ருயிர்க்கும்
ஆதார மாகிய சேனைத் தையுமே
சார்புறத் தாங்குவது பள்ள மதற்குரிய
தன்மையாற் பள்ளனெனச் சாற்றும்பேர் பெற்றேன்
வீரவேற் சொக்கலிங்கப்பெத்தண்ணல் பண்ணைப்பள்ளன்
மேன்மை யெவர்க்குவரும் விள்ளுங்காலே. (உசா)



இன்னமொன்று சொல்வேனென் பள்ளியர் தம்பெருமை
யிதற்குமே லதிகமா யியம்பக்கே ளும்
மன்னு திருமெமொல் கொண்டதும் பள்ளியீசன்
மற்றோர்சேர் வதும்பள்ளி மாநிலமெல் லாம்
பன்னுந் துலுக்கர்தொழு கையும்பள்ளி வாசல்கல்வி
பயிலு மிடமனைத்தும் பள்ளி யிவற்றால்
தென்னன்சொக் கலிங்கபெத் தண்ணல்பண் ணைக்குடும்பு
செய்யடியேன் குலத்திற் சிறந்தோ ருனேன். (உஎ)

---

## நாட்டுவளங் கூறல்.

(கலிப்பா.)

தோட்டுமலர் முல்லையணி சொக்கலிங்கப் பெத்தண்ண
லீட்டுசெர் நெற்பண்ணை யிதுக்குரிய மள்ளியர்கள்
கூட்டகலாத் தேமாங் குயில்போற்செல் வாய்திறந்து
நாட்டு வளமிசைக்க நாவிசைக்க லாயினரே (உஅ)

### சிந்து.

(இ-ம்-பூபாளம், தாளம்-சாய்ப்பு.)

சங்கன் கோடி யுலாவுபண் மீனுமென்
சங்கன் கோடி புனன்முத்த மீனும்
பங்கய மது காடொரும் பாயுமப்
பங்கய மது வண்டொலிப் பாயும்
அங்க ரும்பு சதமிகுத் தோங்குசெய்
யங்க ரும்பு பலவின்னுந் தோடு
செங்கண் மால்சொக் கலிங்கபெத் தண்ணல்
சிறக்கும் பொய்கைநன் னாடெங்க ணாடே. (உகூ)

ஆவி னம்பல தேமலர் மேயுநல்
லாவி னம்பல வின்வள மேயு

மாவ னர்கரு பூத்தொறும் பாடுமெய்
மாவ னந்தரு மஞ்ஞையும் பாடு
மேவ ரம்பையங் காட்டுக் குவந்துவம்
மேவ ரம்பையர் சூழ்குவர் வந்து
கோவ லன்சொக் கலிங்கபெத் தண்ணல்
குபேரன் பொன்னதி நாடெங்க ளூரே. (௩௦)

தளவ மெல்லரும் பீனுமவ் வேனிலைச்
சற்றும் வேனி லெனவறி யாமல்
விளரி யஞ்சொ லிளமட வார்குழன்
மேக மென்று மயிலெதிர்ந் தாடும்
இளமை மாங்குயில் வாய்திற வாம
லிருந்து மேக மிலையெனக் கூவும்
துளப மால்சொக் கலிங்கபெத் தண்ணலுந்
தங்கன் பொய்கைநன் னாடெங்க ளூரே. (௩௧)

பங்க யத்திடை தோன்று கிழமினைப்
பஞ்சி லக விளாவென வுன்னுந்
* கங்க யத்திடை தோன்று மரிதிருக்
கண்கள் போலுங் கமலமுன் வின்னுந்
தங்க யத்திடை மாக்க ணிரைபல
சார்ந்து தாகந்த ணிந்தின்பங் கொள்ளுஞ்
சிங்க நேர்சொக் கலிங்கபெத் தண்ணல்
செழிக்கும் பொன்னதி நாடெங்க ளூரே. (௩௨)

சோலை யெங்கணு மாங்குயில் பேசச்
அணைமுலை மின்னார் சொற்களும் பேசுஞ்
சேலை யூர்ந்து முகிலிடை தாவுந்
திரும்பும் போதெதிர் செல்லும் பிதாவுஞ்

* கங்கு அயம்-குடவாணம்.



சாலுந் தேனுஞ் செழுங்கன்னற் சாறுந்
தடஞ்செய் வாய்க்குளந் தாவியுஞ் சாரும்
மாலெ னுஞ்சொக் கலிங்கபெத் தண்ணல்
வளருந் தென்பொய்கை நாடெங்க ளூரே. (௩௩)

மிக்குங் கோக னகத்திரு *வாற்றில்
விளங்குங் கோக னகக்குலஞ் சேற்றில்
திக்க னைத்து முதிருநற் பூவினுஞ்
சென்று மேயு முதிருமிக் காவின
மைக்கு லங்கதி ராரஞ் செருக்கு
மலர்வண் டாங்கெதி ராரா நெருக்குஞ்
சொக்க லிங்கபெத் தண்ணல் புரக்குந்
துதிகொள் பொன்னதி நாடெங்க ளூரே. (௩௪)

---

## நகர்வளங் கூறல்.

(கலிப்பா.)

முத்தனைய மூரன் முகமதியின் னூர்மதன
அத்திய விவேகவள்ளல் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
சித்தமகிழ் நாட்டுவளஞ் செப்பிமுத் தாளினியா
ளுத்தமஞ்சே ரவர்தம் மூர்வளமுங் கூறினரே. (௩௫)

### சிந்து.

(இ-ம். சௌராஷ்டகம், தாளம்-ஆதி.)

வீதி யெங்குமின் னூர்வளர் கூட்டம்.
விரும்பி யிவர் பசுங்கிளிக் கூட்டம்
கோதை கார்மைக் குழலிற் புனையும்
குளிர்நிழ லின்முன் சந்தம் புனையும்
காத லாருண்மை நெஞ்சத் திருக்குமெக்
காது மில்லைக் கவலைச் சிருக்குஞ்

சீதரன்சொக் கலிங்கபெத் தண்ணல்
செழிக்கு மாற்றங் கரைபெங்க ளூரே. (௧௬)

மின்ன ஞரிசை வண்டிசை செய்யும்
விருப்புற் றோர்மிசை வேளம் பஞ்செய்யும்
நன்ன ரம்புறு யாழொலி காட்டும்
நயந்து கேட்போர் சிரசையங் காட்டும்
பொன்னங் கூடங் ககனம் பொலியும்
பொருந்தும் பூவை யிளிக்கும் பொலியும்
மன்னர் கோன்சொக்க லிங்கபெத் தண்ணல்
வளர்வைப் பாற்றுகல் லூரெங்க ளூரே. (௧௭)

அஞ்சல ரெனும் வேள்சர முண்டு
மடலமர் புரி யஞ்சல மில்லைக்
கஞ்ச மென்றாங் கலங்குவ துண்டு
கருத்து டைந்து கலங்குவ தில்லை
பஞ்சமென் றஞ்சொல் லஞ்செனப துண்டு
படரு மென்றவெம் பஞ்சமு மில்லை
வஞ்சி மன்சொக் கலிங்கபெத் தண்ணல்
வளர்தென் னாற்றங் கரைபெங்க ளூரே. (௧௮)

ஆய வாவியில் வாச மயக்கமுண்
டன்றி வேறு மயக்கமொன் றில்லை
நீடு வான மதிக்குறை யுண்டு
திகழ்ந்த தற்கு மதிக்குறை யில்லை
பாட லாலொரு சல்லிய முண்டு
பார்க ளால்வருஞ் சல்லிய மில்லைக்
கூடன் மன்சொக் கலிங்கபெத் தண்ணல்செங்
கோல்வைப் பாற்றுகல் லூரெங்க ளூரே. (௧௯)



## குயிற்கூக் கேட்டல்.

(கலிப்பா.)

இந்திரபொற் றருசொக்க லிங்கபெத்த வேந்திரன்மதி
மந்திரிசிவ ஞானமுனி வாய்மைநலங் கேட்குதல்போற்
சுந்தரஞ்சேர் பண்ணைமள்ளத் தோகையர்க ளின்பமெய்திச்
சிந்தைமகிழ் மாங்குயில்கள் செப்புரைக்கின் புற்றனரே. (௨௦)

### சிந்து.

(இ-ம். பந்துவராளி, தாளம்-ஆதி.)

தருநிகரும் காதலத்தான் சொக்கலிங்கப்பெத்தண்ணல்
சமுகமெக்கா லமுமோங்கக் கூவாய்குயிலே
பருவமுனி லெனவுதித்த சிவசாமித் துரையதிக்
பாக்கியவா னெனவாழ்கக் கூவாய்குயிலே
திருவளர்சின் னத்துரைவர் மாப்பிள்ளைத் துரைமார்கள்
செயமிகுசம் பனம்பெருகக் கூவாய்குயிலே
அருமைமுனி லெனவுரைசெய் யையாமா ரினைவோரு
மறுதினமும் வாழ்ந்தேறக் கூவாய்குயிலே. (௨௧)

சுந்தரஞ்சேர் கங்கைகுலத் துதித்தசிவ ஞானமந்திரி
தொல்லுலகெல் லாம்விளங்கக் கூவாய்குயிலே
செந்திருவாழ் மார்பினர்சே ருலைகாரர் காணிக்கர்
சிறப்பாக வேயிருக்கக் கூவாய்குயிலே
சந்ததமும் வான்முறையாய்ப் பொய்கைகருள் ளோருஞ்
சார்ந்தோரும் மிகவிளங்கக் கூவாய்குயிலே
கந்தாநீர் பொழியவயல் விளைவுறா ணுவம்பெருகிக்
கற்பகம்போ லேதழைக்கக் கூவாய்குயிலே. (௨௨)

## மழைவேண்டிக் கடவுட்பரவல்.

(கலிப்பா.)

போருஞ் சொக்கலிங்கப் பெத்தண்ணல் விண்மதனை
சீராரும் பண்ணை செழிக்கவிரு மள்ளியரும்
காரார் குயிலினிசை காதாரக் கேட்டுவப்பாய்ப்
பார்மேன் முகில்பொழியப் பலதெய்வம் போற்றினரே. (சக)

சிந்து.

(இ-ம். புன்னாகவராளி, தாளம் ஆதி.)

கற்பகவி நாயகர்க்குத் தோசைவடை பொரி
கடலை யவல்பயறு படைப்பீர் காண்
அற்புதஞ்சேர் நட்டாத்தி யம்மனுக்குப் பொங்க
லபிஷேகங் காழியூட் டிட்டாடிப் பாடும்
நற்கையம்ம னுக்குக்கிடாய்ச் சூட்டன்கறி முட்டை
சோறுங்கழு [illegible] வேண்டுங்கா ணும்
தற்பரையெ னச்சொல்காளி யம்மனுக்குப் பொங்கல்
சாட்டிப் பழங்கரும்பு பால்படைப் பீர். (சஉ)

மட்டார் குழலியப்ப னம்மனுக்குத் தேங்காய்
வாய்ந்தபா னக்கம்பழம் பால்படைப் பீர்
இட்டமுடன் கொல்லக்கொண் டய்யனார்க்குப் பொங்க
லிட்டுப் பிராமண போசனமுஞ் செய்வீர்
சட்டமுட னேதலத்துக் கறுப்பன்முன்னே கள்ளுஞ்
சாராயம் வைத்துக்கிடாய் வெட்டுங்கா ணும்
கட்டழக னுகுமடைக் கறுப்பனுக்கு முட்டை
கருங்கோழி கருஞ்சாவல் கள்ளும்படைப் பீர். (சங)

காசினி பணியும்பேச்சி யம்மனுக்குப் பூசைக்
காணபா லாடுகுத்தி யாடுங்கா ணும்



தேசபிரு ரக்கத்தி யம்மனுக்கு வேண்டுஞ்
சிறந்தபூ லாடுகுத்தித் தாலாட்டு வீர்
வாசனைச்செம் மலர்த்தொடை வைரவர்க்கு நல்ல
வளஞ்சே ருழுந்துவடை மாலையிடு வீர்
தேசபிரு மேடைக்கா ரார்தமக்குச் சாவல்
வினைகளை யாய்க்கழு வேற்றுங்கா ணும். (சச)

மூலைக்கரைச் செவிட்டைய னார்க்குருவம் பண்ணி
முன்னிருந்துக் கொழுங்கிடாய் வெட்டுங்கா ணும்
மாலைக்குழல் வடக்குவாய்ச் செல்விக்குத் தினை
மாவிளக்க மேற்றிமுளைக் கொட்டியா டும்
சீலமுற்ற கவிபாணத் தோப்பில்வாழ் தேவ
தேவனுக்குப் பூசைபலி சேசமுஞ்செய் வீர்
ஞாலமுற்றும் பணிசொக்க லிங்கபெத் தண்ணல்பண்ணை
நன்றாய்த் தழைத்துவிளை வோங்குங்கா ணும். (சரு)

---

## மழைக்குறி யோர்தல்.

(கலிப்பா.)

துங்கவளை வந்துதித்த சொக்கலிங்கப் பெத்தண்ணல்
பொங்க முறும்பண்ணை புவியில் வளர்ந்தேறச்
செங்கைகுவித் தித்தினத்தே நீள்முகில் பெய்யமள்ளர்
மங்கையர்தெய் வந்தொழுது மழைக்குறியுண் டாயினரே. (சசு)

சிந்து.

(இ-ம். முகாரி, தாளம்-ஆதி.)

இன்றுமுதல் மழைபொழி யின்றமெய்க் குறி தோன்றி
பெருக்கெழுந் தடையுநாடு கொழுங்கி டாய்மழி

நின்றுபொழு தக்க லொட்டிச்சென்று மின்னுது மேக
நிரைநிரை யிரண்டின் மேற்கருமை தன்னுது
துன்றுநீர்த் தவளைவெவ் வேறொன்றி யார்க்குது மூட்டை
சோர்விலா தெறும்புமற் றொர்சார்பிற் சேர்க்குது
வென்றிமதன் சொக்கலிங்கப் பெத்தணை துரை பண்ணை
வியல்புற விளையுமுகில் பெயுநிலை யிலை. (௪௯)

வெள்ளம்வரு முன்னதாக மள்ளரே வாரும் காலின்
மேல்கரைசெய் யிடமெல்லாங் கூர்மையாய்ப் பாரும்
கன்னிருட்கெண் ணெய்ப்பந்தங் கைக்கொள்ளுங்கா ணிங்கே குச்
நால்புறமுங் கட்டுங்கரை மேலிருந்தங் கே [சில்
வள்ளமொன்று சேறுமழை வெள்ளமேற் சென்று போக
வரப்பருங் கொங்கணி குடைதரச் சொலுமின்று
தென்னுதமிழ்ச் சொக்கலிங்கப் பெத்தணை துரை பண்ணைச்
சேரிமள்ளர்க் கெல்லாஞ் சொல்லிவாருங் காணும். (௫௦)

## ஆற்றின் வரவு.
(கலிப்பா.)

தூரந்தரிகள் பொய்கையர்கோன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
புரந்தரன்பண் ணைக்குடும்பன் பூவை யினையபள்ளி
கருங்குழல்போன் மேகமெழக் கண்டிதுகார் காலமுகில்
பரந்து மழைபொழியும் பருவமெனக் கண்டானே. (௫௧)

## சிந்து.
(இ-ம்-தோடி-தாளம்-சாய்ப்பு.)

மால்சொக்கலிங்கபெத் தண்ணல்புக
போலெழும்புயல் கடலுண் ழ்
மருவுமன்னிற மாறியம்பி டு
வண்ணம்பெருகக் கருக்கொண் கை
டு



மேலெழுந்து விண்மிதடார்ந்தவ ன்
விரவேலென மின்னி யே
வெய்யவமரிற் செயமுரசெ ன
மீறுமசனி துன்னி யே
காலமிசைபன் னூற்பெருங்கட ல்
தலைமைமாளு மோங்க வே
தண்டமிழுணர் கடிகைமாக்க ள்
கொண்டவறுமை நீங்க வே
நீலவண்ண னெனுமவன்சொ டை
நிகரெனமழை சொரிந்த தே
நெடியபொதிய வரையின்மீ து
நெருங்கியப்புன லிரிந்ததே. (௫௨)

## குறிஞ்சிநிலச் சிறப்பு.
(கலிப்பா.)

எங்குந்துதி செய்சொக்க லிங்கபெத் தனேந்திரதுரைச்
சிங்க மகிழச் செழிக்கும்பண் ணைக்குடும்பன்
மங்கையினை யாடருகா மத்திச் சுடாதுவின்மேற்
கங்கை படிவதெனக் கண்டுமகிழ்த் தாடினனே. (௫௩)

## சிந்து.
(இ-ம்-புன்னாகவராளி, தாளம்-அடசாய்ப்பு.)

படருந்தாரை மலிபுனல்பொரு ப்
படருந்தாரை யாமென ப்
படியுமாரத் திரட்டியெய ப்
படியுமாரமேவிட்டு க்
கடியவேங்கை யகன்றிடநெரு ங்
கடியவேங்கை யசைந்திட த்

கரியவேனன் மாதர்புய
கரியவேனன் மூட்டொடு வி
கொடியனைத்துமொன் றுக்கிமான க்
கொடியனைத்துமெல் லிலையெலா க்
கொண்டதுலைத்து மயில்களைமரு ங்
கொண்டவலைத்து பீறி கு
புடவிபுகழ்சொக் கலிங்கபெத்த பே
கொடைமுகில்பணி குகைரு ண
போதமருவித் தமிழ்வளையில ட்
போதமருவி சரித்ததே. ப்
(ருச)

---

## பாலைநிலச் சிறப்பு.

(கலிப்பா.)

சோலை மருவுபொய்கைச் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
வாலமதன் பண்ணைமன்னர் மாதினிய பள்ளிசெஞ்சொல்
பாலைநிக மென்பர்முன்னோர் பாலையினைநிருந்தாத்
சாலவிதற்குச் சரியுவமை வேறிலையே. (ருரு)

### சிந்து.

(இ-ம்-ஆனந்தபைரவி. தாளம்-அடசாப்பு.)

பொருவமலையி லுளமுற்றுங்கொண்ட
பொருவமலையிக் காக ம்
பூர்க்கடத்து விருக்கும்பாலை வே
பூர்க்கடத்தும் வழிசென் ய்
குரவமரத்தத் தனித்திடநெரு அ
குரவமரவில் வேடர்த ஞ்
கட்டமிடையத் தேவர்க்கிடுமி ங்
கட்டமிடைய வாரி க்
தே



காவிலம்புக் கூடெலாச் ந்
காவிலம்புக் கூடி மே
ஏவவேடத் திபர்தமக்குமி க்
ஏவவேடத் திரைத்தக் கு
திருவளர்சொக் கலிங்கபெத்த ண
திருபன்மகிழ்ச்சி கூர வே
சென்றுமுல்லை கமளிடம்பெ ரி
சென்றுமுல்லையிற் பாய்ந்ததே. (ருசு)

---

## முல்லைநிலச் சிறப்பு.

(கலிப்பா.)

தொண்டர்பா லுண்மைபுரி சொக்கலிங்கப் பெத்தண்ணல்
கொண்டல்பண் ணைக்கேற்ற குடும்ப விளையபள்ளி
தண்டாளப் பூண்முலைப்பேர் சாற்றுவன லாதினமெக்
கொண்டு வரும்பெயரோ கூற வறியானே. (ருஎ)

### சிந்து.

(இ-ம்-கவரோக, தாளம்-ஆதி.)

இடைமின்னார்கள் வாய்மொழியெ ஜ
மிடைமின்னார்க ளகந்து மை
யிருமுலைப்பசும் பாதுகடை ந
யிருமுலைப்பவங் கொழுகிட க்
குடைகொங்கணிப விடையர்தம்மரு ன்
குடைகொங்கணிப முலையுங்கா ன்
குக்குடங்களு நிறுத்துந்தேவ எ
குக்குடங்களுஞ் சுழல வே
அடையுமானை முடிக்கியிந ழி
யடையுமானை நுபலை ந்

மாங்கங்கூடி யூடிநெருக்
பாங்கங்கூடிக் கவுசல சி
குடகர்பணிசொக் கலிங்கபெத்த ர்
நெடியமால்பெரும் புகழென ண
குலவிமருத நிலத்திற்பாய்ந்த க்
குலவிமருதம் பொலிந்ததே. ங்
(௩அ)

---

## மருதநிலச் சிறப்பு.

(கலிப்பா.)

சோமனிகர் பொய்கைமன்னன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
பூமன்வயற் பண்ணைமள்ளப் பொற்கொடிக்க மாதினியாள்
காமவெள்ளத் திற்குளித்துக் களிவாய் மதுநுகரத்
தாமதஞ்செய் வான்குடும்பன் சார்மருத வெல்லையினே. (௩௯)

### சித்து.

(இ-ம்-மோகனம். தாளம்-ரூபகசாய்ப்பு.)

மருதனிலையு மன்னிலத்தி
மருதனிலையுந் தாக்கி ல
வாரியாறு பெருகிக்கரும் பே
வாரியாறு செல்ல டை
அருணதனமள் ளியர்தம்மொழி லே
ளருணதனைகட் டுடங்க ளி
பாவமலியச் சுழற்றிநெருங் லை
மரவமலிகை மூட்டெடவ ஒ
பாளியாம்பை தள்ளியுலக ம்
பாளியாம்பை மூகமென ம்
பங்கயமதுப் பாயுங்குளம ப்
பங்கயமுற்றும் பெருக்கி ப்
லே



புரவலன்சொக் கலிங்கபெத்த ள
நருவன்செந்தமிழ்க் கடலெனை ப்
பூமிநெய்தலர் கமழுமைக்கட ல்
பொருந்துநெய்தலங் கடைந்ததே. (௪0)

---

## நெய்தனிலச் சிறப்பு.

(கலிப்பா)

புவனியெல் லாம்புரக்கும் பொய்கை நகர்க்கோமான்
றவளுமிடை யார்மோகன் சொக்கலிங்கப் பெத்தண்ண
லெவரு மகிழ்பண்ணை யிளையபள்ளி யானவட்குக்
குவளைகட லாறுதுங் குவளைவிழிக் கொப்பாதே. (௪௧)

### சித்து.

(இ-ம்-மத்திமாபதி-தாளம்-அடசாய்ப்பு)

தாலமடலுங் கட்குடமுழு க்
தாளமடலு மேற்சென் று
தத்தளித்திடக் கரையினைப்போ ரு
தத்தழித்திட மீனைத்தும்போய் க்
கோலமினைய பரத்தியர்பக் று
கோலமினைய வளைவையு ம்
கோடியடைய மலர்ப்புன்னைமரு ங்
கோடியடைய மேற்றிம ண்
மேலுமலையத் திசையினைத்தி று
மேலுமலைய மலைமி க
விரியுமுப்பள ரத்தியுப்ப ள
விரியுமுப்பள சொலிசெ ய
வாலமதன்சொக் கலிங்கபெத்த ண
ஞாலநிருப னடிதொ ழ

மகதரங்கர்வந் தடைதல்போலு
மகதரங்கமடைந்ததே. று
(௬௨)

## நதிச்சிறப்பு.

(கலிப்பா.)

இன்னமுத வாக்கிசொக்க லிங்கபெத்த ணேந்திரனென்று
மன்னுசிவ ஞானமந்திரி வளரவளர்க் கும்புகழ்போல்
கன்னலஞ்சேர் வைகை நளிர்புனலெங் கும்பெருகிப்
பன்னரிய மீனம் பலபலவாய்ச் செய்தினவே. (௬௩)

சிந்து.

(இ-ம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.)

படரும்வனத்துப் பொலியுமுலைவரு
படரும்வனத்துக் கருங்கண் ம்
பனிவிலாங்கு கறவுமீன ணி
பனிவிலாங்கு தயிசைமீ ம்
கடல்படவுசம் பாகொதுக்கிமி வ்
கடல்படவுரை திருக்கைமீ க்
கரும்பனரும்பன் வாளமீ ன்
கரும்பனரும்பன் மயிலைமீ ளி
மிடையவாளை யரைவவா ன்
மிடையவாளை யிலைவப ர
மேகங்கோடி பெருக்கும்வெள் ல
மேகங்கோடி யுலவு ன
வடிதமிழ்ச்சொக்க லிங்கபெத்த வே
தொடைமுல் லைமணிமார்பிறு ண
ன்வையபெருகிப் பண்ணைசெழிக் ன்
வருதல்பாரும் பள்ளீரே. க
(௬௪)



பொதியவரையின் மீதுவரை ம்
பொதியவரையி லாம ழை
பொழியவினைத்து சோலைபடர்வெ ப்
பொழியவினைத்து மிகமி க
அதிருமருவி வெள்ளநீர்மி த்
கதிருமருவி யவுடல ம்
அம்புகடத்து வேடர்தங்கள் கை
யம்புகடத்து மிலைவி ழி
மதிவனத்துழு லைமுலைமரு த
மதிவனத்து மூளரிதங் த
மாவதனமை நெய்தற்சைவ ல
மாவதனமைக் கூந்தல்சே ர்
நதிமின்வந்துசொக் கலிங்கபெத்த ண
நிதிபண்ணைமிக வாழ்த்தல்போ ல்
தளிர்வைப்பாறுலி பெருகிவா ர
வளமைபாரும் பள்ளீரே. (௬௫)

---

## பண்ணைத்தலைவன்வரவு.

(கலிப்பா.)

ஏர்வளரு மால்சொக்க லிங்கபெத்த ணேந்திரனைச்
சேரடிபோற் றித்தொழும்பு செய்யும்பண் ணைக்குடும்பன்
வார்முலையின் ஞனியைய மன்னியைமீங் காதிருக்குங்
காரணமுட் கொண்டுபண்ணைக் காரனும்வந் தற்றனே. (௬௬)

சிந்து.

(இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி)

ஓட்டிய கன்னமுமாறியிட்ட வடியும் போற்று
வெட்டிய கன்னடையா யதட்டுதடி யு ம்

முட்டி யனையவயிறும் வட்டமுக மூக் கொன்னல்
முட்டி யனையமி லாச்சொற்றட் டதிகமு ஞ்
சட்டி யகலந் தலையும் பொட்டிமுக்கும் வாயச்
சட்டிய கலசம்போ லுட்பட்ட நாக்குமா ப்
அட்ட திசையணி சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணை
யாளெனச் செலுத்துமதி காரனுர் வந்தார். (௬௭)

சந்தன மாரிமுன்செல் கால்வித்தல் செய்வாராந் தட்டிச்
சந்தனமாரில் விழுந்தெழுந்து வைவா ரா ஞ்
சுந்தர முத்திவெ ளிலையிந்தா வென்பாராய் காரஞ்
சுந்தரமுத் திருளிமெய் யந்தாவென் பார ங்
கந்தமது வாய்மருதி சொந்தமென் பாராம் பேச்சிக்
கந்தமது வாய்வெறி யிருந்ததென் பார ஞ்
செந்தமி ழுணருஞ்சொக்க லிங்கபெத் தண்ணா மகிழ்
சேர்மருவு பண்ணையதி காரதிர னுர். (௬௮)

---

## கப்பல் வரவு.

(கலிப்பா.)

வந்தபண்ணை யாண்டார் மலர்த்தா ளிணைவணங்கி
யந்திபக லாய்மள் ளடிமைத் தொழில்புரியுந்
சிந்த கடவேனச் செழும்புனலிற் கப்பல்விட
வந்தனரு ளுத்தார முதவவென்று னல்கினனே. (௬௯)

## கப்பற்சிந்து.

செந்தமிழ்சேர் பொய்கைமின்னன் கொடைக்குச்
செழுமுகில்போ லுதவுகண்ணன் ஏலேலோ
சுந்தரவா னயர்குணவான் செயவான்
சொக்கலிங்கப் பெத்தணமால் ஏலேலோ



சந்ததமு நீடூழி பெருகவென விண்டு
தரியாது மாநதியின் வருதோணி கண்டு
இந்திரது மனதுமகிழ் பள்ளனிலை யானை
யிடைபிரிவி லாதுகடி தேவியனல் வேலை. ஏலேலோ. [௭௦]

இனியபள்ளி மயவாது பெருகி
யெழுந்துவரும் புனன்மீது ஏலேலோ
வளருமிளங் கொங்கைவள்ளத் தனிப்போய்
மருவினங்கா லணைப்பன்னம் ஏலேலோ
உளமகிழ்வி னுடசோண சக்கரன்பி டித்து
னன்றுகலைசாய தொதுங்காதுன் விட்டு
வளவனென வுரைசொக்க லிங்கபெத் தண்ணல்
வளர்பண்ணை மன்னனே வலும்வருது கப்பல். ஏலேலோ. [௭௧]

பள்ளிபிளையாள் சொற்கண்டுஞ் செய்யிதழ்ப்
பவளமுமுத் தமுமிரண்டும் ஏலேலோ
வள்ளமுலைக் குவிதனமு மாவ
மணியுங்கா வலையினமும் ஏலேலோ
கல்விருவை யும்பருகு குழனில மணியும்
நகையுமிலவை பல்வேற்றி னாலமெதிர் பணியுந்
தென்னுதமி ழுணர்சொக்க லிங்கபெத் தண்ணல்
சித்தமகிழ் பன்னனே வலும்வருது கப்பல். ஏலேலோ. [௭௨]

---

## மூத்தபள்ளிமுறையீடு.

[கலிப்பா]

தும்புருபா டற்குவல்ல சொக்கலிங்கப் பெத்தண்ணல்
பம்புபண்ணைப் பள்ளமெய்திப் பள்ளன் வாராமையினு
லம்பிவிட வில்லையென்று ரக்காலம் பண்ணையர்தன்
கும்பில்வந்து மூத்தபள்ளி கூறத் தொடங்கினளே. [௭௩]

## சிந்து.

[இ-ம்-பெலகிரி-தாளம்-ஆதி.]

அய்ய னேயடி யாளென்ன செய்
வலன்ற லேயடி யாளெனக் கண்டா வே
எய்து மில்கடர் தாவிலைப் பள் ன்
விளமு லேகடந் தாவிலை கொண்டா ன
தெய்வ நீயொருக் காலும்பொய் சொல்லே ன்
செழுங்கன் றுமொருக் காலுங்கை தீண்டா ன்
மெய்முகில் சொக்க லிங்கபெத் தண்ண ன்
மிகமன துமகிழ் பண்ணையாண் டே. ல்
[எச]

ஆண்டவ ருடன்சொல் வேனென் றுலெ
ராண்டவ ருடமென் றெலேயேக வா வ
வேண்டிய துரை யென்பே னவரிட ன்
வேண்டிய் துரை நீயெனக் கேட்பா ம்
பூண்டெ மாதவு முமிலவ ளிஙப ங
பூண்டெ மாதமு வாவிரு வேபாது ம்
பாண்டி யன்சொக் கலிங்கபெத் தண்ணை ம்
பதாம்பு யம்பர வும்பண்ணை யாண்டே. ல்
[எரு]

---

## இளையபள்ளி முறையீடு.

(கலிப்பா.)

தும்பிதமூர் விஸ்வதனன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
செப்புமொ ருதமக்கிமி லெவரான வேறுரைசொல்
பொய்ப்பதென்று மில்லையது போதுரைத்தா னென்றுண்டா
ரொப்பி யிளையா ருடன்கூடினரே. [எசு]



## சிந்து.

[இ-ம்-கலரோக. தாளம்-சாய்ப்பு.]

பள்ளி யிளையவ ளெங்கென்று னல்லிற்கும்பன்
பாரிவள் ளக்தேரய மேலிட்டுத்
தன்னி வருதாண்டு களைய லறுப்புண்டாகித்
தனியே விழுந்தி டக்கண்டும்
எள்ளி மூத்தாள் கூட்டிப்போனாள் பாம்புக்கடிவைத்
தெதிர்த்து நிதெனன் றறியேன்
வள்ளல் சொக்க லிங்கபெத்தணல் பண்ணையாண்டேயென்
மனது மிகப் பதறுதே. [எஎ]

பல்ல தாம்போற் பட்டிருக்கும் மூத்தவள்மனப்
படியென்ன செய்கி றீரோ
செல்ல தாமா நதிக்கரை வரச்சொல்வீராற்
செய்வே னதற்கு மருந்து
நல்ல தாங்கைத் திடாது தித்திக்குமுன்னை
நாடா துவிடமு முண்டோ
வல்ல தாவேல் வலான்சொக்க லிங்கபெத்தண்ணல்
மனமகிழ் பண்ணையாண் டே. [எஅ]

---

## இளையாளைப் பண்ணைத்தலைவனுரைப்பல்.

[கலிப்பா.]

இளையபள்ளி சொல்லதுகேட் டிதைய மிகப்புழுங்கி
வளர்கெங்கோ பம்பெரிதாய் மதமொழிசொல் லாளுநிற்
றுருவமுத லோர்பணியுஞ் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
மனமகிழும் பண்ணையிரு [illegible] தேடினனே. [எகூ]

### சிந்து.

[இ-ம்-காம்போதி. தாளம்-ஆதி]

கள்ளமேயுனை நீங்காது கள்ளமேயுன்னுந் — தன்மை
காட்டுதுசொல் லென்றுவாய்நாக் காட்டுதுனக்குக்
குள்ளியேயிந் தனை திருக் குள்ளியேமெத்த — மெத்தக்
கூறினைகண் டித்துநெருக் கூறினையாதே
பள்ளனேயிப் பாரிலுந்தன் பள்ளனைகள்ள — னிவ்போற்
பகரமாட்டான் பொய்வளர்க்கும் பகரநீகொண்டாய்
உள்ளமகிழ் சொக்கலிங்கப் பெத்தனைதுரை — பண்ணைக்
குரியவுன்கு டும்பனுக்கும் பெரியவனேனே. [௮௰]

வஞ்சியேமுந்நாள் சொற்றுகா வஞ்சியேயிரா — னுந்தன்
வதனமுமிளகியது வதனமும் விட்டுச்
சஞ்சரியா னுன்னுடைய சஞ்சரியின்று — மென்று
தரிப்பதுமுன் னுடனிற்க தரிப்பதுமிங்கே
அஞ்சரி விழியுமுனை தஞ்சரிக்கையுங் — காணு
நகலமாட்டான் சாய்ந்தமூலை யகலமாட்டான்
கஞ்சனை வென்ற மால்சொக்கலிங்க பெத்தண்ணல் — பண்ணைக்
காரனுன்மேல் வைக்குமதி காரனேனே. [௮௧]

---

## பள்ளன் வெளிப்படல்.

[கலிப்பா.]

நாகநக குலனிகருஞ் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
பெருகுபண்ணை யாண்டவனூர் பேசுங் கடிவயுரை
யிருசெவியி லும்புகுத வேற்றக் கணக்குடும்பன்
ஒருநொடிக்குள் வந்துபணிந் தன்னுவப்பக் கூறினனே. [௮௨]



### சிந்து.

(இ-ம்-சகானா. தாளம்-ஆதி.)

பாதவர் தனைப்புரிந்தேன் — வெயிற்கடிதிப்
பாதவர்தனைச் சேருவீர்
வேதனையடை வாரிரும் — மண்ணில்வருங்கால்
வேதனையடை வாருமே
காதலால்வந் ததுபோலே — விளைந்நீர்குடிந்
காதலால்வந் ததுணர்ந்தேன்
ஆதலர்கற் பகதரு — சொக்கலிங்கபெத்
தண்ணல்பண்ணை யயினரே. [௮௩]

---

## பண்ணைச் செயல் வினவல்.

[கலிப்பா.]

சுதனெனவ சோதைபெற்றோன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
அதுலனுயர் பண்ணையினு னவனை முகநோக்கிக்
கதிர்விளையுஞ் செந்நெல்வயற் காரியமெல் லாமெனக்கு
விதவிதமாய்த் தோன்றும்வண்ணம் விளம்புகெனச் சொன்னனனே.

## அவனதுகூறல்.

### சிந்து.

[இ-ம்-ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.]

வையைபொன் னதிபெருகிக் — குறிஞ்சிமுதல்
வாரிவரைசெ லக்கண்டேன்
ஐந்திலங்க ளிலுமுள்ள — குளங்கணிறை
வாகவெல்லாம் பெருக்கினேன்

தெய்வத்திரு வருளினுற் கலுக்கணையிற்
செழுநீர்ப்பறி யாதடைத்தேன்
தையலிரதி மதவேள் சொக்கலிங்கப்பெத்
தன்னைப்பண்ணை யயினுரே. [௮௫]

## நிலவொழிப்பு.

[கலிப்பா.]

துவாரக ராஜ்பெருமான் சொக்கலிங்கப் பெத்தன்ன
துவமையிலான் பண்ணைவய லொக்குபண்ணை யாண்டேகேள்
குவலயமொன் றையுமைந்து கொண்டநில மாப்விரித்தே
வைளவுக்கும் வேண்டுமுழு வான்பிறவுஞ் சொல்வேனே. [௮௬]

சிந்து.

[இ-ம்-முகாரி-தாளம்-சாப்பு.]

நீர்கடுவொரு பூவிடமாம்
கெடிநிலப்புன்னில மெனக்கண்டே கு
எழுவக்கரும முழும்படியே ன
ஏற்றதனைப்பெரு கவிரித்தே ய
பார்புகழ்சொக்க லிங்கப்பெத்தன்னல்செய் ன்
பண்ணைக்கேற்ற குறிஞ்சிவெம்பா ப்
தார்மலிதரு முல்லைமருதமெ லை
தல்விளங்கும் யெழுநிதற்காண்டே. ய்
[௮௭]

ஆயதோகின் னிலக்களுழும்ப
ஆளுமேர்த்தன பாடமும்வேளு டி
நீயென்சொல்லை மூமதுட்கொண்டுபொ ம்
வீடுசொக்கல் கொடுதருவாயே ன்
ல்



வாய்மைசேருன் மொழிப்படிவாங் கி
வருகிறேனொரு வாரத்திலேதா ன்
வேயிசைசொக்க லிங்கபெத்தன்னா ல்
விபேகனென்று மகிழ்பண்ணையாண்டே. [௮௮]

[கலிப்பா.]

கருணை னெனவுரைசெய் சொக்கலிங்கப் பெத்தன்னல்
மகுடபதி பண்ணையினுன் மள்ளனுரை போற்கொடுத்தான்
மிருவிரகம் பூண்டிளையாள் மிக்கவூ ருடனடைந்து
தருபண மியாவுநல்கித் தக்கதுகைக் கொண்டானே. [௮௯]

சிந்து.

[இ-ம், நீலகாம்போதி. தாளம்-திரிபுடை]

பண்ணையினுன் சினந்தடிமைப் பள்ளனவா வில்லைத் தள
பாடமெங்கே யாளெங்கே யொப்பரிதவன் வாய்ச்சொல்லை
எண்ணாரிய நன்னிதிய மெத்தனையோ கொடுத்தேன் விரைந்
திருநான்கு நாளில்வா வென்றுசொல்லி விடுத்தேன்
வண்ணமுலை மாதிளையாள் வளர்மனையிற் சேர்ந்தா னின்னம்
வாவில்லைப்போய் சொல்லுதற்கு மனதுமிகத் தேர்ந்தான்
கண்ணனிகர் சொக்கலிங்கப் பெத்தண தயாளு பண்ணைக்
கழனி யுழும்படிய வனைக்கடி தழைக்கவென்றுன். [௯௰]

## ஆளொழிப்பு.

[கலிப்பா.]

என்னிலமும் போற்றுசொக்க லிங்கபெத்த னேந்திரதுரை
நன்னலஞ்சேர் பண்ணையினு ளிணமலர்த் தாள்வணங்கி

மன்னு முரோமபத மாறுடு மால்வரைகா
னென்னுபன்னு டெல்லாங்கண் டுற்றேனென் றேத்தினனே. [௬௧]

சிந்து.

[இ-ம்-புன்னாகவராளி. தாளம்,சாய்ப்பு.]

அன்றி லங்கைகன் டோன்சொக்க லிங்கபெ
தன்னை லம்பண்ணைக் காட்கண் டழைத்தே த்
குன்று மூவுக்கு வேலையுள் ளெண்ணை ன்
குறிப்ப லான்வெறி கொண்டவ னென்று ம்
தன்று பாலைக்கோர் பெண்ணையாட் கேட்டேனெ ன்
சூழ்ந்து ளோரெலாம் பேயரெ னச்சொன்னு ற்
ஒன்று முல்லைக் கரியை யுழுவைபெ ள்
றோதி னேன்சிங்க மென்றன னுண்டே. ன்
[௬௨]

நன்மரு தந்துக் கிந்திரனை வேண்டி
னுத வாய்விட்டு மீண்டி லேனென்று னே
பன்னு நெய்த லினுக்கு வருணனை ன்
பார்க்குங் கான்முன் வருண னுனென்று ப்
மன்னு நெல்லெரு தேர்த்தன் பாட ன்
வழங்கு வாரிலைக் கேளுமொவ் வொன்றுய் ம்
கன்ன னேர்சொக் கலிங்கபெத் தன்னை க்
கருத்தி கந்து மகிழ்பண்ணை யாண்டே. ல்
[௬௩]

---

வித்தொழிப்பு.

கல்லுண்டை கவிக்கும்ப லுறைகின்
கல்லுண் டையுற வாம்படி யச்ச ற
தில்லை நாயக மூர்பட்டி யில்லெலன்ப து
தில்லை நாயக நெல்லென் றறியே ர்
ன்



வல்லடி யான்மலை மண்புகுந்த தை
வல்லடி யான்வித் தென்றெவர் கண்டா ர்
வில்லவன் சொக்க லிங்கபெத் தன்னை ல்
விபேக வான்மகி ழும்பண்ணை யாண்டே. (௬௪)

முத்து வெள்ளைபை மைந்தரு மாத ரு
முத்து வெள்ளை வெளப்பெப ரேற்று ர்
எத்தின மூமதனை வளிதர் செ ட்
டெத்தின முத லோர்க்குமிற் கின்று ர்
வித்த வத்தமொப் பாதுகல் லோர்வ ரு
வித்த வத்தஞ் சரிபென்று மாகு ம்
உத்த மன்சொக்க லிங்கபெத் தன் னை
துதித யுள்ள மகிழ்பண்ணை யாண்டே. (௬௫)

சித்திரக் காலி நெல்லெனச் சொல்லுவ ர்
செப்புங் கால்வன்ன மாடுக ளாயி ன
கஸ்தூரி வாணன் முதற் பாதியை க்
காத வித்துத் தருக்கர்கைக் கொண்டா ர்
புத்த னெல்லொரு தெய்வவு ருக்கொண் டு
போயின கைக்கொண் டார்கள் பவுத்த ர்
சித்தசன் சொக்க லிங்கபெத் தன்னை ல்
செழித்து நாளும் வளர்பண்ணை யாண்டே. (௬௬)

கம்ப னெல்லோர் கவினுரு ருக்கொண் ட
காரண முனக் கேதெரி யா தோ
கொம்பன் வல்லத்தி லுண்டுமிங் கில்லை க்
குலவு காடைக் கழுத்தானை மாதரு ங்
தம்புரு டர்க ளுங்களத் தாற்சொலு ஞ்
சாடை காட்டுதற் காம்படி கொண்டா ர்

செம்பியன் சொக்க லிங்கபெத் தண்ணல் வ
சீர னுக்குத் தரும்பண்ணை யாண்டே. (௯௭)

## மாட்டொழிப்பு.

வன்மை யாகக் குகனுஞ் சிவ
மயிலைக் காளையைக் கைக்கொண்டு போயின னு
முன்ன ரேயுள்ள முன்கொம்புக் கா ர்
முழுதுங் கோழை யுழமுடி யா ளை
பன்னரும் புல்லை மாடுண்டு போயிற்று து
பாரி லீது தினமும் பழக்க ப்
கன்ன னேர்சொக்க லிங்கபெத் தண்ணலெ ம்
காலுஞ் சிந்தை மகிழ்பண்ணை யாண்டே. க் (௯௮)

இக்கரும் போரா னைக்கா ணரிது த
னிக்கரும் போரா னும்பசு வேறி லை
மிக்க வெள்ளை தலைநா ளுளதொ ரு
மிக்க வெள்ளை யுழவுத வா து
சிக்கென வெள்ளையா னையரன் கொண்டா ன்
றேவர் கோன்வெள்ளை யானைக்கைக் கொண்டா ன்
சொக்க லிங்கபெத் தண்ணல்பொற் பாத ந்
துதிக்கும் பொய்கை வளர்பண்ணை யாண்டே. (௯௯)

செம்ம றையனு காவாணி கொண் டு
திரிகு துகிசை நாலுந் தலையா ய்
வம்மெ னினும்வ ராதொரு புல் லை
வடத்தை யொட்டிப் படுத்தே கிடக்கு ஞ்
சொம்மி னிற்கிளிக் கொம்புள கா ளை
கழிபெ கிக்க ளவுக்கு ளாச்சு து



எம்மை யாள்சொக்க லிங்கபெத் தண் ண
லிதைய னாரு மகிழ்பண்ணை யாண்டே. (௧00)

## தளபாடவொழிப்பு.

கலப்பை யாவும் வணிகர்கைக் கொண்டன ர்
காணுங் காலை நுகைப்பையா வென்பா ர்
வலுத்த கொண்டி யெனத்தெர்வ மொன் றை
வலுத்த கொண்டி யெனச்சொலு வா ரோ
குலக் களிறன் றுழவுத வா து
கொழுக்கட் டைபென் றணவுக்குட் கொண்டா ன்
சிலைக்கு வேள்சொக்க லிங்கபெத் தண்ண ல்
சிறக்கும் பொய்கைநல் லூர்ப்பண்ணை யாண்டே. (௧0௧)

வள்ளத் கைநுக மேர்க்கால் பரம் பு
மரங்கைக் கோல்மேழி யாறு ளடங்கி ன
வெள்ளத் தைக்கடை நாளில் வடம து
பீறி யாலம தாகவி ளைந்த து
பள்ளச் சாதி யெனுமிலை பெங்கை ப்
பணமி ளாளைப் பைக்கு ளொளித்தா ர்
பின்னைக் கோன்சொக்க லிங்கபெத் தண்ண ல்
பிரிடி யுள்ள மகிழ்பண்ணை யாண்டே. (௧0௨)

## பணவொழிப்பு.

[கலிப்பா.]

பெத்தரிகன் சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணையினுன்
சித்தர் தனைக்கும்பன் செப்புமொழி மேனடத்தி

சித்தமுதன் பேழிமற்றும் வேண்டான்வர் தானெனு
மத்தச் செலவை யறியவுரை செய்தானே. (௧0௩)

### சிந்து.

(இ-ம் முகாரி, தாளம்-ஆதி.)

கலியனைத்துங் கலிகொண்டு போய்ச்செழு ங்
கான நண்ணித் திரிந்திட லாயி ன
கலவு ராகனோர் கள்ளனுள் ளாயிற்றி ன்
னுள்வ னாக்குங் கொடுக்க வேயில் லை
நிலமு ளோர்வெள்ளி நாணய முற் று
நினைந்து நாணயம் பார்த்துக் கவர்ந்தன ர்
தலைமை சேர்சொக்க லிங்கபெத் தண்ண லு
தார னுக்குத் தரும்பண்ணை யாண்டே. (௧0௪)

இன்ன வாறு பலருங்கொண் டார் க
ளெடுத்தவ ரெக்கன் சேரிக்கொண் டார்க ள்
முன்ன மேதெரிந் தானுமு மைப்பே ன்
முயன்றினிச் சந்தனந் தானுமைப் பே ன்
னின்ம னம்போ னடைப்பேனிப் போ து
நிலைத்த தாயொன் றெனக்கினிப் போ து
மன்னர் கோன்சொக்க லிங்கபெத் தண்ண ல்
வளரும் பொய்கையில் வாழ்பண்ணை யாண்டே. (௧0௫)

---

## ஆயனை வருவித்தல்.

(கலிப்பா.)

சொற்றவறி டாதுரைசெய் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
கொற்றவர்கோன் பண்ணைக் குடும்ப னிடும்புளாதான்
பற்றிச் சிறையில்வைத்தாற் பகர்வனிச மென்றுணர
அற்றாரஞ்செய்க் கேற்றெனவு முற்று னிடையரிற்கே. (௧0௬)



### சிந்து.

(இ-ம் ஆனந்தபைரவி. தாளம்-ரூபகசாய்ப்பு.)

பெருகுறுகர் சொக்கலிங்கப் பெத்தண்ணல் பண்ணையெல்லா ம்
பெருகுமுரா மேற்றுவனுன் பிரிதுனாயே னுண் டே
குருகுகன்மா துலனடியார் கூட்டமிரு கிடையா டு
குருகுவனை யிற்புகுமுன் கொடுவருவே னுண்டே. (௧0௭)

கற்பகவேல் விடுத்தசெந்தூர்க் கந்தனுக்கு முன்னுதித் த
கற்பகவி நாயகனார் கருணையினா லாண் டே
சொற்குலவு பொய்கைநல்லூர்ச் சொக்கலிங்கப் பெத்தண்ண ல்
சொற்குலவீர் வயலிற்கிடை தொடுத்துவைப்பே னுண்டே. (௧0௮)

---

## ஆயர்வரவு.

(கலிப்பா.)

சகமனையார் மால்கொள்மதன் சொக்கலிங்கப் பெத்தண்ணல்
மகபதிதன் பண்ணை வயல்க ளனைத்திலுக்கும்
புகுமுராமேற் றுகிடை போடு மெனக்குடும்பன்
பகருமொழி கேட்டிடைக்கோ பாலக்கோன் வந்தானே. (௧0௯)

### சிந்து.

(இ-ம் புன்னாகவராளி. தாளம்-ஆதி.)

தூக்கணுஞ்சேர் கடகாலு நெற்றியிற்கை யகல ந்
துலங்குதிரு மணிமார்பி லிலங்குதுழாய் மணியு ம்
நீக்கருங்கம் பனியுமுற்ற கொங்கணியுங் குடை யு
நீலவண்ணக் குல்லாவு நீடுமெருங் குடையு ங்
தேக்கிபதுன் டத்தாடு மெய்த்துவரு கனமு ந்
திருமூல்கா மங்கையே செப்பியவா யிதமு ம்

வாக்குமிக் காய்ச்சொக்க லிங்கப்பெத் தணைப்பண் ணை
வயலூர்மேற் றூடுகிடை வைத்திடக்கோன் வந்தான். (கக0)

## அவர் பெருமை கூறல்.

மாலாட்டை யொருபாம்பு தான்சுமந்து கொண்டதெல்லா ம்
வயலினுக்குக் கிடைபோட வருமோசொல் குடும் பா
வேலாட்டைச் சந்தவரை முருகனுக்குள் ளாயின தை
லேனுமென்றாற் கிடைபோட விடமாட்டான் குடும் பா
சேலாட்டு துவசமன்னன் சொக்கலிங்கப் பெத்தண்ண ல்
செயவிசையன் பண்ணைவயல செகத்தனைந்தங் குடும் பா
நாலாட்டைக் கொண்டுகிடை போட்டுமேற் றுவன்முழு து
நல்விரவி காணுமூர்த்தி யல்லிருளிற் குடும்பா. (ககக)

---

## மூத்தபள்ளி முறையீடு.

(கலிப்பா.)

ஆயர்கோன் சாலிவய லனைத்துங் கிடைபோட்டா
னேயுங் கிடைகாத் திடவருவே னென்றுபன்னன்
போயினையாள் குச்சில் புகுந்தா னெனமூத்தாள்
வாய்திறந்து பண்ணையர்க்கு வழுத்தத் தொடங்கினளே. (கக௨)

### சிந்து.

(இ-ம்-முகாரி. தாளம்-ஆதி.)

இத்தனை நாளும் விளைக்கும் பொய்
யுத்தியைக் கேளும் நான்சொல் வேன்
என்சொல்லை யறிப்பீர் இதை யிட்டுப்
